©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 20] சென்னை, புதன்கிழமை, மே 20, 2026
வைகாசி 6, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண்.28, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M1)த் துறை, நாள்: 13 மார்ச் 2026.]*

2009ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) 53ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மத்திய அரசுடன் கலந்தாலோசித்த பின்னர், 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமுறை எடையளவு (செயலாக்கம்) விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 53 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்.**

மேற்சொன்ன விதிகளில், விதி 9–இல், துணை விதி (3)–க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(3) துணை விதிகள் (1) மற்றும் (2)–இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு வணிக நடவடிக்கைகளிலும், A வகை அல்லது B வகை தராசுகள் (Beam Scale) அல்லது 1 மி.கி. அல்லது அதற்கு குறைவான சரிபார்ப்பு இடைவெளி கொண்ட உயர் துல்லிய வகை (வகை II) அல்லது சிறப்புத் துல்லிய வகைப்பாட்டைச் சார்ந்த (வகை I) தானியங்கி அல்லாத எடையளவுக் கருவி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்".

**கே. வீரராகவ ராவ்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.